**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No.495/2023</u>**

**<u>வழக்கு சாட்சி PW-1</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரிச்செல்வம் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of March 25th , 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் சுரண்டை, சிவகுருநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கணேஷ் பீடி கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனது தங்கை மாரீஸ்வரி திருமணச் செலவுக்காக சிவகுருநாதபுரத்தில் உள்ள எங்களுக்கு சொந்தமான வீட்டை எதிரிக்கு கிரையம் கொடுக்க ரூ.8,75,000/-ற்கு பேசி முடித்து வைத்திருந்தோம். ரூ.3,00,000/- அட்வான்ஸ் பணமாக எதிரியிடம் பெற்றுக்கொண்டு கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டது. அந்த கிரைய ஒப்பந்தத்தில் நானும், எனது தாயார் வசந்தா, எனது தங்கை மாரீஸ்வரி ஆகியோர் கையெழுத்து செய்தோம். எதிரியும் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டுள்ளார். அந்த கிரைய ஒப்பந்தத்தின் ஜெராக்ஸ் இது தான். அது **அ.சா.ஆ.1**.(இது எதிரி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது). மீதி பணம் ரூ.5,75,000/-த்தை எதிரி 3 மாதங்களுக்குள் தரவேண்டும் என்று ஒப்பந்தத்தில்

குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரியிடம் பாக்கி தொகையை கேட்டபோது, அவருக்கு சொந்தமான இடத்தை விற்று எங்களுக்குரிய பணத்தை தருவதாக கூறினார். அந்த இடம் விற்பனை ஆகாததால் எனக்கு பணம் கொடுக்க முடியவில்லை என்று சொன்னார். மேலும், அட்வான்ஸ் கொடுத்த பணத்தை திரும்ப கேட்டார். நாங்கள் கஷ்டப்பட்டதால் அந்த பணத்தை வாங்கி, திருமணச் செலவுகள் செய்ததால் எதிரி கேட்டபடி பணத்தை கொடுக்க முடியவில்லை. எதிரி ஒரு வாரத்தில் திருப்பி கேட்டதால் பணத்தை திருப்பி கொடுக்க முடியவில்லை. 18.06.2019 ம் தேதி, இரவு 08.45 மணியளவில் காமராஜர் நகரிலுள்ள எனது வீட்டிற்கு முன்பு நின்று கொண்டிருந்தேன். அப்போது, அங்கு வந்த எதிரி எனது அம்மாவிடம், ரூபாயை கேட்டார். ரூபாயை தருவதாக நாங்கள் சொன்னோம். எதிரி "தேவடியா மவளே" என்று கெட்ட வார்த்தைகளால் பேசி, அரிவாளால் எனது அம்மாவின் தலையில் வெட்டும்போது அதை வலது கையால் தடுத்ததில் எனது அம்மாவின் வலது உள்ளங்கையில் காயம் ஏற்பட்டது. மீண்டும் வெட்டியதில் புஜத்திலும் காயம் ஏற்பட்டது. சம்பவத்தை பார்த்து எதிரியை தடுத்த சாட்சி கவின், மணிவேல் ஆகியோரை எதிரி " பக்கத்தில் வந்தால், உங்களையும் வெட்டி கொன்னு விடுவேன்" என்று சொல்லி அரிவாளை காட்டி மிரட்டினார். காயம்பட்ட எனது அம்மாவை ஆம்புலன்ஸ் மூலம் தென்காசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தோம். பின்னர் அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு சிகிச்சையில் இருந்தபோது, 19.06.2019 ம் தேதி, மதியம் போலீசார் வந்து விசாரித்தார்கள். நடவடிக்கை எடுக்க புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த புகார்

வாக்குமூலம் **அ.சா.ஆ.2.** எதிரி வழக்கு சம்பவத்தில் அம்மாவை வெட்ட பயன்படுத்திய அரிவாள் இது தான். அது **சா.பொ.1.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –**

இல்லை.

PW1

C KATHIRAVAN

Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.03.26 16:44:09 +0530